Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 31 | விளம்பி ஆனி 1958 ஜுன் | இதழ் 6

குருவாக்கியம்*

[ஆறுமுக நாவலர் அவர்கள்]

அன்பர்களே !

1. எந்தப் பிறவியிலும் மனிதப் பிறவி உயிர்களுக்குக் கிடைப்பது மிக அரிது ; மனிதப் பிறவி கிடைத்தாலும் சைவ நாட்டிலே பிறக்கக் கிடைப்பது அதினும் மிக அரிது. சைவ நாட்டிலே பிறக்கக் கிடைத்தாலும், சைவ சமயத், திலே நுழையக் கிடைப்பது அதினும் மிக அரிது. சைவ சமயத்தைக் கடைப்பிடித்து ஒழுகி, முத்தி இன்பம் பெறும் பொருட்டே மனிதப் பிறவி கிடைத்தது.

2. சைவசமயம் என்றால் சிவபெருமானை வழிபடும் நெறி என்பது பொருள். சிவன் பிறப்பு இறப்பு இன்றி என்றும் உள்ளவர். எங்கும் நிறைந்தவர். இயல்பாகவே எல்லாம் அறிபவர். எல்லாம் செய்யவல்லவர். தமது அனுபவத்தின் பொருட்டுப் பிறிது ஒன்றையும் வேண்டாதவர். பிறர் வசத்தினராகாது தம் வசத்தினராகவே உள்ளவர். உயிர்களிடத்துள்ள இரக்கமே திருமேனியாக உடையவர். இந்த இலக்கணங்கள் எல்லாம் உடையவர் சிவன் ஒருவரே.

*இது ஆசாரியர், சமய தீக்ஷை செய்தவருக்குச் சொல்லத்தக்கதாக நாவலர் எழுதியது. இக்கால நடையைப் பின்பற்றிப் புரியாத சொற்களை நீக்கித் தமிழ்ச்சொற்கள் இட்டு ஆக்கப்பட்டது. இதற்கு மூலம் துன்முகி ஆனியில் (1896)-ல் அச்சிட்ட பிரதி. —தீ.கி.நா.

ஆதலால் சிவபெருமான் ஒருவரே உயிர்களுக்குத் தலைவன். சிவனிலும் உயர்ந்தவர் உண்டென்று கொள்வது இகழ்ச்சி இந்த உண்மை எல்லாம் அறிந்து, சிவபெருமான் ஒருவரையே வழிபடும் சமயம் சைவ சமயம்.

3. சிவனை வழிபடு நெறியையும், சிவன் ஏவல்வழி ஒழுகும் தேவர்களை வழிபடு நெறியையும், அறிவிக்கும் பொதுநூல் வேதம். சிவனை வழிபடும் நெறியையே விரித்து அறிவிக்கும் சிறப்பு நூல் சிவாகமம். சிவனை வழிபடத் தகுதியை உண்டாக்குவது சிவாகமத்தில் விதித்த சிவதீக்ஷை; சிவனுடைய அடையாளங்கள், திருநீறு, கண்மணி; சிவனுடைய மூல மந்திரம் ஐந்தெழுத்து; சிவனை மிக மகிழ்விக்கும் வாழ்த்துகள், தேவாரம் திருவாசகம்: சிவனை வழிபடும் இடங்கள் குருலிங்க சங்கமம். தீக்ஷை செய்பவர், சைவசமயத்தை அறிவுறுத்துபவர், சைவசமய நூலைக் கற்கச் செய்பவர், யாவரும் குருவே. சிவதீக்ஷை பெற்று, திருநீறு கண்மணி அணிந்து, சிவாலயத் தொண்டு, சிவபூசை, சாத்திரம் படித்தல் முதலியன செய்யும் சிவனடியார்கள், சங்கமர்.

4. உங்களுக்கு மனிதப் பிறவி கிடைத்தது. அம்மட்டோ! சைவ சமயம் வழங்கும் நாட்டிலே பிறக்கவும் கிடைத்தது. சிவன் உங்களுக்கு அருளும் பொருட்டு இங்கே இந்தக் கும்பத்திலும், மண்டலத்திலும், அக்கினியிலும் நம்மால் அழைத்து உட்புக வைத்து, பூசிக்கப்பட்டு உங்களுக்கு அண்மையர் ஆனார். சிவன் உங்களுக்கு, தீக்ஷையாகிய அருளைச் செய்ய, இடங்கொண்டு மறைந்து நின்று செலுத்தும் குருவடிவம், நாம், நீங்கள், நம்மால் இங்கே, இப்பொழுது சமயதீக்ஷை செய்யப் பெற்றீர்கள். இந்தச் சமய தீக்ஷையின் வாயிலாக நீங்கள் சைவ சமயத்தில் நுழைந்தீர்கள். திருநீற்றை மந்திரத்தொடு அணியப்பெற்றீர்கள். ஐந்தெழுத்தை நாம் உபதேசிக்கப் பெற்றீர்கள். தேவார திருவாசகம் ஓதத் தகுதி பெற்றீர்கள். குருலிங்க சங்கமங்களுக்குத் தொண்டு செய்ய உரிமை பெற்றீர்கள். எல்லாவகையாலும் சிவனுக்கே அடிமை பூண்டீர்கள்.

5. இனி இறுதிநாள் வரை கடைப்பிடிக்கவேண்டாதன எவை? வேண்டியன எவை? என்று நீங்கள் நன்றாக ஆராய்ந்து, அறிந்துகொள்ளல் வேண்டும். ஒழிப்பன

ஒழித்து, கொள்வன கொண்டு இறுதி நாள்வரை ஒழுக வேண்டும்.

6. பெரும்பான்மையும் எச்சமயத்தாரும் விலக்கத் தக்க பாதகங்கள் உயிர்க்கொலை, களவு, கள் உண்ணல், புலால் உண்ணல், பொய், பிறர்மனை புகுதல் முதலியவை. இவைகளை நீங்கள் ஒருபோதும் செய்யலாகாது.

7. தந்தை, தாய் முதலிய பெரியோர்களை ஒரு சிறிதும், அவமதிக்காது எந்நாளும் மிக்க மரியாதை செய்து பாது காத்து நடத்தல்வேண்டும். வறியவர்கள், தொழில்செய்து வாழவல்லமை இல்லாத கூனர், குருடர், முடவர், பிணியா ளர், கிழவர் இவர்களுக்குச் சமயம் வாய்க்கும்பொழுது உங்களாலே கூடிய உதவி செய்தல் வேண்டும். உங்களுக் குத் தீமை செய்தவர்களுக்கும் நீங்கள் நன்மையேசெய்தல் வேண்டும். இவையாவும் எல்லாச் சமயத்தாருக்கும் வேண் டப்படும் அறங்கள்.

8. சிவன், குரு, சிவனடியார், சைவ சாத்திரம் இவற்றை இகழ்தலோ, பழித்தலோ, கூடாது. சிவ சொத்தை, குருப்பொருளை, பயன்படுத்தல் கூடாது. இவை அதிக தீமைகளான வஞ்சனைகள். இவைகளை நீங்கள் மறந் தும் செய்யாது, இறுதி நாள்வரை உன்னிப்பாக இருத்தல் வேண்டும்.

9. முறையாக நாள்தோறும் காலைமாலை வழிபாடு செய்து, சிவனை நினைத்து, ஐந்தெழுத்தை இயன்ற உரு கணித்து, சிவனை வழுத்துதல்வேண்டும். பெண்கள் விலக் கானல் மூன்று நாளும் ஐந்தெழுத்தை மனத்தால் சிந்தித்தல் வேண்டும். நாலாம் நாள் நீராடியபின் நடைமுறையைச் செய்யலாம்.

10. திருநீறு நெற்றியில் எப்பொழுதும் அணிந்து கொள்ளல் வேண்டும். கீழே சிந்தாவண்ணம் அண்ணாந்து சிவசிவ என்று சொல்லி வலக்கையின் நடுவிரல்கள் மூன்றி னலும் அணிதல் வேண்டும். திருநீறு இடாத முகம் சுடு காட்டுக்குச் சமம். ஆதலால் திருநீறு அணிந்தே புறத்தில் புறப்படல் வேண்டும்.

11. அன்றாடம் அல்லது நல்ல காலங்களில் கோயிலுக் குப் போய்ச் சிவனைக் கண்டு வணங்கி வலம்வந்து பரவுதல் வேண்டும். உங்களால் கூடியபொழுது, கோயில் நறுமணப்

புகை இடுங்கள்; விளக்கு ஏற்றுங்கள்; அலகிடுங்கள்; மெழுக்கிடுங்கள்; பூந்தோட்டம் வையுங்கள்; தூய்மையோடு பூ எடுத்து மாலை கட்டிக்கொடுங்கள்; சுற்றிலுள்ள புல்லைச் செதுக்குங்கள்.

12. குருவையும், சிவனடியார்களையும் கண்டால் உடனே இருக்கைவிட்டு எழுந்து கைகூப்பி வணங்குங்கள். அவர்கள் எதிரே இருக்கும் முறை அறிந்து இருங்கள்; பேசும் முறை அறிந்து பேசுங்கள்; அவர்களை, எவரேனும் குற்றம் சொன்னால், காது கொடுக்காது அகலுங்கள்.

13. சிவனின் வேறாகாத திருவருளே சிவ சத்தியாம் அம்மை. ஆதலால் அம்மையை வழிபடுவது சிவனை வழி படுவதேயாம். நல்வினை செய்தவர்களுக்கு அருளும், தீவினை செய்தவர்களுக்கு ஒறுப்பும் செய்தற் பொருட்டுச் சிவன், கருணையினாலே கொண்ட வடிவங்கள், அவருடைய பிள்ளைகள் எனப்படுகிற பிள்ளையார், முருகர், வைரவர், வீரபத்திரர் ஆவர். ஆதலால் அவர்களை வழிபடுவது சிவனை வழி படுவதே ஆகும். குருவினிடத்தும், சிவனடியார்களிடத்தும் சிவ அடையாளமும் மந்திரமும், பெயரும், மேன்மையும், சாத்திரமும், விளங்கக் காண்டலினால் அவர்களை வழி படுவது சிவனை வழிபடுவதே ஆகும். இப்படி அன்றி உயிர்ப் பலி ஏற்கும் சிறுதெய்வங்களை வணங்கலாகாது. வணங்கினால் உங்களுக்குக் கேடு தப்பாது சிவனால் கிடைக்கும்.

15. கோயிலில், மடத்தில், தேவார திருவாசகம் ஓதுதல், சைவச் சொற்பொழிவு செய்தல், சிவபுராணம் படித்தல் முதலியன நிகழும் பொழுது நீங்கள் முதன்மையாகச் சென்று, உளத்திட்பத்தொடு கேட்டல் வேண்டும்.

16. நீங்கள் ஒருகாலத்தில் அறிந்தோ அறியாமலோ தகாதன செய்தாலும், தக்கன செய்யாது ஒழிந்தாலும் மனம் பதை பதைத்து, குருவிடம் விண்ணப்பம் செய்து, அவர் முன்னிலையில் கழுவாய் செய்துகொள்ளல் வேண்டும். (கழுவாய் - பிராயச்சித்தம் - செய்த பாவத்தைப் போக்கும் வழி.)

17. பெறுதற்கு அரிய மனிதப் பிறவியும், சைவ நாட்டுப் பிறப்பும், சைவசமய நுழைவும் பெற்ற நீங்கள், இவை வீண்போகாவண்ணம் நாம் இங்கே அறிவுறுத்திய படி ஒழுகிச் சிவன் திருவருளைப் பெற்று வாழ்வீர்களாக.

ஆலய அமைப்பு

கோவை கிழார்

(மலர் - 31 ; இதழ் - 5 ; 182-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகமங்கள் முழுவதையும் சேகரித்துப் படித்து அறிந்துகொள்ளச் சோம்பற்படும் ஆலய ஊழியர்களின் பொருட்டு சில சிவாசாரியப் பெரியார்கள் முக்கியமான விதிகளை மட்டும் கோத்துத் திரட்டுகளாக வெளியிட்டிருக்கிறார்கள். இத்திரட்டுகளை வைத்துக்கொண்டே தற்கால ஆலய வழிபாடு பரிபாலனம் செய்யப்பெற்று வருகிறது. இந்தத் திரட்டுகளும் வடமொழியிலேயே உள்ளன. இவைகளையும் படித்த அர்ச்சகர்கள் அல்லாத மற்ற மக்கள் அறிய வழியில்லை. ஆகவே ஆலய அமைப்பைப் பற்றி ஆராயவேண்டின் காரணம், காமிகம் போன்ற சிற்சில அச்சு நூல்களே நமக்குக் கிடைக்கும் அடிப்படை நூல்கள் ஆகின்றன.

இனி தமிழ் நாட்டுச் சிறப்புச் செல்வங்களை அறிய வடமொழிக்குத்தானா போகவேண்டும்? தமிழ் மொழியில் இல்லையா என்ற கேள்வி நேரடியாக எழும்பும் அல்லவா? இது ஒரு சிக்கலான கேள்வி. சிறந்த ஆலயங்கள் தமிழ் நாட்டிலேதான் இருக்கின்றன. அவைகளைக் கட்டியவர்கள் தமிழர்களே. அவைகளைப் போற்றுகிறவர்களும் தமிழர்களே. அப்படி யிருக்க, வடமொழியில் மட்டும் நூல் ஏற்பட்டுத் தமிழில் அவைகள் ஏன் ஏற்படவில்லையோ என்று எவனும் கேட்கலாம். குறிப்பிடத்தக்க சிறப்புப் பெருமை வாய்ந்த ஆலயங்கள் பல்லவர் காலத்திலும் அவர்களுக்குப் பிந்தியுமே ஏற்பட்டன. பல்லவர்களில் முதல் வம்சமும் இடை வம்சமும் (4 முதல் 7 நூற்.) வடமொழியையே போற்றி வந்தன. தமிழைப் போற்றியதாகச் சாஸ்திரங்களே இல்லை. பின் வம்சம்தான் தமிழைப் போற்றிற்று. மகேந்திர வர்மன் நரசிம்மவர்மன் போன்று இடைவம்சத்து சக்கரவர்த்திகளே கோயில் அமைப்பில் அக்கறை எடுத்துக் கொண்டிருந்ததனாலும் அவர்கள் வடமொழியையே ஆதரித்து வந்ததனாலும் சிற்பிகள் தங்கள் நூல்களை வடமொழியிலேயே நுழைத்திருக்கவேண்டும். ஆகவே ஆகமங்களும்

அவைகளைப் பின்பற்றிய சிற்ப நூல்களும் வடமொழியிலே எழுதப்பட்டன போலும்.

தற்போதும் ஆகமங்களைத் தவிர ஆலய அமைப்பைப் பற்றிக் கூறும் மற்ற சிற்ப நூல்களும் வடமொழியிலேயே இருக்கின்றன. மயமதம் மானசாரம் சிற்ப ரத்தினம் முதலிய நூற்களும் வடமொழியே. இவைகளில் சிறந்த பிரதிகள் தமிழ்நாட்டில் அகப்படாமல் திருவிதாங்கூரில் அகப்பட்டன என்றால் அதுவும் விளங்கவில்லை. மலையாள முறைக்கும் தமிழ் முறைக்கும் ஆலய அமைப்பில் வேறுபாடுகள் இருக்க நமது சிற்ப நூல்கள் அங்கே எப்படிச் சென்று சிக்கிக்கொண்டனவோ அறியோம். நமது தமிழ் நாட்டுத் தபதிகள் விசுவகுலத்தார்கள். இவர்கள் வடமொழிச் சிற்ப நூல்களையே படித்துப் பின்பற்றுகிறார்களாம். திருவிதாங்கூரில் வெளியிட்ட சிற்ப நூல்களிலும் செய்யுள்நடை மிகத் தாழ்ந்ததாக உள்ளது. படிப்பில் சிறந்தவர்கள் எழுதினதாகத் தெரியவில்லை என்பர்.

இனித் தமிழில் ஆலய அமைப்பைப் பற்றிய நூல்கள் இல்லையோ, இருக்கவே இல்லையோ என்று கேட்டால் அறிஞர்கள் அவ்வகைத் தமிழ் நூல்கள் இருந்தனவென்றும் காளாவட்டத்தில் மறைந்தன என்றும் கூறுகிறார்கள். இக் கருத்து இவ்வாறு இருக்கத் தமிழிலும் கோயில் அமைப்பைக் குறித்துக் கூறும் ஒரு சிறந்த நூல் உண்டு. அதுவே பண்டைத் திருமுறையாகிய திருமந்திரம் ஆகும். அதில் ஆலய அமைப்பு கூறப்பட்டுள்ளது.

ஆகமப்படி ஆலய அமைப்பு : ஆலயங்கள் இயற்கை செயற்கை என்ற இருவிதத் திருவுருவங்களைக் கொண்டவை. இயற்கையாக இருந்த உருவங்களைச் சுற்றிக் கோயில் எழுப்புவதற்காகக் கருவறை முதலில் கட்டிய பிறகு மற்ற மாச்சர்யங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டிப் பெருங் கோயில் ஆக்குவார்கள். அதற்காக நிலத்தை விதிகளின்படி தெரிந்தெடுக்க வேண்டியதில்லை. செயற்கைத் திருவுருவங்களுக்கு ஏற்படும் ஆலயங்களுக்கு மட்டும் நிலத்தையும் தெரிந்தெடுக்க வேண்டும். இதற்கு ஆகமங்கள் விதிகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆலயங்கள் கட்டும் நிலங்கள் இருவகைப்படும். புலிகள் முதலிய கெட்ட விலங்குகள் வசிக்கும் காடுகள்

இராக்கத பைசாச நிலங்கள் என்னப்படும். அவைகள் கோயில் கட்டப் பயன்படா. இது முதலில் நன்செய்ப் பயிர்கள் விளையும் நிலங்கள் ஈசுவரகலை பசு நிலம் என்னப் படும். அவைகளே கோயில்கட்டத் தகுதியான நிலங்களாம். இவ்வித நிலங்கள் ஒருவகைப்படும். அவைகளில் ஈசுரபசு நிலங்களைத் தெரிந்தெடுத்து, உழுது நீர் பாய்ச்சிப் பயிரிட் டுப் பசுக்களை மேய்த்து சுத்தப்படுத்திப் பின்னரே கோயில் எழுப்பவேண்டும்.

முதலில் அரக்கர்கள் முதலிய தீமைகளைப் போக்கு தற்கு வேள்விகளைச் செய்து பிரவேச பலிகளைக் கொடுத்து வாஸ்துசாந்தி என்ற தூய்மை ஒழுங்கைச் செய்யவேண்டும். பிறகு கட்டிடத்திற்காகக் குறிப்பிட்ட கற்களை எழுப்பிக் கொண்டுவரவேண்டும். தூய்மையான செங்கல்களைச் சுட்டு நல்ல மணலைப் பரப்பிவைக்க வேண்டும். பிறகு நவரத்னம் நவதான்யம் முதலான 108 சாமான்களைச் சேகரித்து அகற்றிப் பாரம் எடுத்து அதில் இட்டுப் பூசித்துக் கட்டிடம் தொடங்கக் கோயில் அவைகளின்பேரில் கர்ப்பக்கிருகம் முதலிய வைக்கப்படவேண்டும். இந்த முறையில் கோயில் கட்டிடத் தொடக்கம் செய்யவேண்டும்.

இனி கோயிலின் படம், ஒன்றை அகல நீளத்திலும், பிறகு உயரத்திலும் கணித்து வரையவேண்டும். ஒவ்வொரு பகுதிக்கும் அளவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறைப்படி அஸ்திவாரம், பீடிகை, மதில்,கால்கள், உத்தரம், மேல்முக்கு, கோணம் முதலியவை அமையவேண்டும். பொதுவாக ஒன்று முதல் 7 ஆவரணங்கள் வரை கட்டப் படலாம். நடுவில் உள்ளது கருவறை, அதன் முன்னர் அர்த்தமண்டபம், பிறகு மணிமண்டபம் அல்லது அந்த ராளம், பிறகு மகாமண்டபம், பிறகு முன் மண்டபம் இவைகளே யன்றிப் பெரிய கோயில்களிலே 16 கால், 32 கால், 64 கால், 108 கால், 1008 கால் மண்டபங்களும் கட்டப்படுகின்றன. இனி கொடிமரம், பலிபீடம், தெப்பக் குளம், தீர்த்தக் கிணறு முதலியவைகள் ஒவ்வொரு கோயி லுக்கும் உண்டு. பிராகாரங்களில் நந்தவனமும் வாகன அறைகள், சாமான் அறைகள், தேர்ச்சாமான் அறை, சமய லறை, களஞ்சியம், தேர் மேடு முதலியவைகளும் உண்டு.

சிவாலயங்களில் சுவாமி கோயில் மட்டுமன்றி அம்மன், பிள்ளையார், முருகன், பைரவர், நடராசர், நவக்கிரகங்கள், 63 அடியார்கள், நந்தி முதலியவைகளுக்குத் தனி ஆலயங்களும் மண்டபங்களும் உண்டு. அதைப்போலவே திருமால் ஆலயங்களில் கெருடன், அனுமான், ஆழ்வாராதியர் முதலியவர்களுக்கு மண்டபங்கள் உண்டு. தின விழா மண்டபம், அலங்கார மண்டபம், கொலு மண்டபம் முதலியவைகளும் உண்டு.

கல்யாண பாத்திரம் விக்கிரகங்கள் வைக்கப்படும் அர்த்த மண்டபத்தில் பூசை சாமான்கள், திரிகூடங்கள் பழக்கால் முதலியவைகள் வைக்கப்படும். விழாக்களும் 9 வகை எடுபிடி சாமான்கள் உண்டு. 5 வகை வாத்தியங்களும், வாகனுதிகளும் வைத்திருப்பார்கள். யாகசாலை, தளிகைசாலை தனியாக உண்டு. இவைகட்கு எல்லாம் விதிகள் நிரம்ப உண்டு. இவைகள் எல்லாம் ஆகம நூல்களிலும் புராண நூல்களிலும் கோயிலுக்கேற்றபடி விவரம் சொல்லியிருக்கின்றன.

தத்துவப் பொருள் : எந்த ஒரு இயக்கத்தை மனிதன் தொடங்கினுலும் அதனை வளர்த்து வைத்துப் பயனைப் பெற்று இன்புற்ருலும், அந்த இயக்கத்திற்கு ஒரு தத்துவப் பொருளைக் காண்பது அவனுடைய நுட்ப அறிவின் ஆற்றல் என அறியவேண்டும். அப்படிப்பட்ட நுண்ணிய அறிவுடைய மனிதன் தான் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்த்தின சமய நிலையங்களுக்கு ஒரு தத்துவப் பொருளைக் காணமாட்டானு? ஒப்புவமைகளை வைத்துக் கொண்டு அரிய தத்துவப் பொருள்களை அவன் அங்கேயும் காண்பான் அல்லவா? ஆகவே சமய நிலையங்களில் மிகச் சிறந்ததாகும் கோயில் அமைப்பின் தத்துவப் பொருளை அவன் கண்டு கொண்டது ஒரு வியப்பு அல்ல. கோயில் இறைவன் எழுந்தருளும் இல்லம் ஆகும் (கோ+இல்). மனிதன் வசிக்கும் இருப்பிடம் அவனுடைய வீடு ஆகும். மனிதனுடைய செல்வ நிலைக்குத் தக்கவாறு அவன் வசிக்கும் வீடும் இருக்கும். அது குடிசையாகவும் மாளிகையாகவும் அதுபோலவே இறைவனுடைய கோயிலும் அதன் சூழ்நிலையைப் பொருத்து சாதாரண நிலை முதல் ஏழு நிலை

மாடம் வரைக்கும் உயர்ந்திருக்கும். இது சாதாரண உவமையாகும். இதனினும் உயர்ந்த ஒரு உவமை உண்டு.

கோயில் இறைவன் உறைவிடம் ஆகின் மனிதனுடைய உடல் அவனுடைய உயிர் அல்லது ஆன்மா வசிக்கும் அரிய இருப்பிடம் ஆகும் அல்லவா. இதனை உயர்ந்த ஞானிகளும் உரைத்திருக்கிறார்கள். ஒப்புயர்வற்ற சித்தர் திருமூல நாயனார் இவ்வுவமையைக் கூறும்போது,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

இப் பாசுரத்தில் உடம்பு ஆலயத்திற்கு உவமையாக்கப் பட்டது. கருவறை, ஆலயம், கோபுரம், சிவலிங்கம், ஒளி விளக்கு இவைகள் கோயிலுக்கு இன்றியமையாத பகுதி கள். அவைபோலவே உடலுக்கு உள்ளம், ஊனுடம்பு, வாய், சீவன், புலனறிவு இவைகள் இருக்கின்றன. மனித னுடைய உடலில் அவன் உயிர் வசிப்பதுபோல இறைவன் ஆலயத்தில் இறைவன் வசிக்கிறான். ஆகவே ஆலய அமைப் புக்கு ஒரு உவமை மனித உடலமைப்பிலே காணப்பட்டது. மனித உடம்பின் அமைப்பை முன்னிட்டு அவன் தான் வழிபடும் கடவுளுக்கு ஒரு இருப்பிடம் உண்டாக்கினானோ' என்று சிலர் எண்ணக்கூடும். இந்தத் தத்துவ அறிவைத் திரு மந்திரம் சிவபூசை என்ற பகுதியில் 21 பாடல்களிலே (1792—1812) விரிக்கின்றது கண்டு கொள்க.

இதனையே பெருக்கி உரைக்கும் மற்றொரு பாசுரமும் உண்டு.

"படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பற் கங்காகா
நடமாடக் கோயில் நம்பற் கொன்றீயிற்
படமாடக் கோயில் பகவற்க தாமே" (1821)

என்பதாகும்.

இனி ஆலயத்தின் மற்ற வெளிப்படை அமைப்புகளும் மானிட உடல்நிலையில் காணலாம். ஆலயங்களில் ஒன்று முதல் 7 வரை சுற்று நிலைகள் உண்டு. ஒரே ஒரு சுற்று உள்ள கோயில் (பிள்ளையார் கோயில் போன்ற குச்சியைக்

கோயில்) மனிதனுடைய பருஉடம்பை (ஸ்தூல)போன்றது. பருஉடற்குள் உயிர் இருப்பதுபோல் ஒரு சுற்றுகொண்ட ஆலயத்தில் மூலப்பொருள் இருக்கும். இனி 3 சுற்று உள்ளது. பேரூர்க்கோயில் போன்ற புனிதத் தவக்கோயில் அதனைப் போன்றது. மனிதனுடைய பருவுடல் (ஸ்தூல) நுண்ணுடல் (சூக்குமம்) நுண்ணுள்ளம் (காரணம்) என்பன. தவிர ஐந்து மதில் உள்ளது திருவானைக்கா போன்ற பெருந் தலங்கள். இது மனிதனுடைய 5 கோசங் களுக்குச் சமமானது. 1. அன்னமயகோசம். 2. பிராணமய கோசம். 3. விஞ்ஞானமயகோசம். 4. ஆநந்தமயகோசம். 5. மனோமயகோசம் என்ற நுண்ணிய அடுக்கடுக்கான உடல்கள். இறுதியாக 7 மதில்கள் கொண்ட மாபெருங் கோயில். சீரங்கர் கோயில் இதற்கு உதாரணம். இது மனிதனுடைய ஏழு உடல்களுக்குச் சமமானது. பூ, புவ, சுவ, மகா, ஜன, தபோ, சத்தியோ முதலிய ஏழு லோகங் களுக்கு அமைந்த நுண்மையில் மனிதனுக்கும் ஏழு நுண்ணுடல்கள் உண்டு என்பர்பெரியோர். அந்த உவமை யைப் பொருத்து உள்ளது மாபெருங் கோயில் என்க. ஆகவே கோயிலமைப்பு உடம்பின் அமைப்போடு ஒத்திருக் கும் தத்துவத்தை மனிதன் கண்டான்.

இனி அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என் பது பழமொழி. அதன் எதிரிடையும் அதைப்போலவே பிண்டத்தில் உள்ள உட்கிடை போலவே அண்டத்திலும் உண்டு என்க. மானிட உடம்பைச் சுற்றி நுண்ணுடல்கள் இருப்பதைப் போலவே அண்டங்களைச் சுற்றிப் பெரும் அண்டங்கள் உண்டு. அவைகளைச் சூரிய மண்டலங்களாக வும் நட்சத்திர (உடு) மண்டலங்களாகவும் வகுக்கின்றனர். இவைகளுக்கு நடுநாயகமாக ஒரு மாபெரும் எரிகுழம்பு அண்டம் இருக்கும். அவ்வெரி அண்டமே, எல்லாச் சுற்று அண்டங்களையும் ஆட்டி வைக்கும் ஆற்றல் கொண்டது. அதுபோலவே கருவறையில் இறைவன் நடுநாயகமாக வீற் றிருப்பான். சுற்றிலும் 3, 5, 7 மதில்கள் ஆவரணங்களாக அமைந்திருக்கும். இந்த வகையில் ஆலய அமைப்பு ஏற்பட் டுள்ளது.

இனி ஆலயத்தில் ஒவ்வொரு பகுதியிலும் மூலையிலும் சுற்று தேவதைகளின் உருவங்கள் அமைக்கப் பெற்றிருப்

பதை அறிவோம். அந்த தேவதைகளுக்கும் சின்னஞ்சிறு தனி அறைகள் உண்டு. அவைகளுக்குத் தனித்தனி செயல்களும் பயன்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை ஒத்தாற்போல பிண்டமாகிய உடலிலும் அண்டமாகிய அண்டவானத்திலும் உண்டு. உடலில் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளைப் போலவே ஆலயத்திலும் உண்டு. அவைகளை விரிக்கில் பெருகும்.

அரசனுக்கு திருவுலா, திருவோலக்கம், விருது, சயனம், பள்ளியெழுச்சி முதலியவைகள் ஏற்படுதல் போலவே கோயிலில் உள்ள இறைவனுக்கும் திருவிழா, கொலுவு, பூசை, அர்த்தசாமம், அனந்தல், பள்ளியெழுச்சி முதலிய சடங்குகள் உண்டு. இவைகள் எல்லாம் உற்று நோக்கின் மனிதன் தன் சூழ்நிலையை ஒத்தே ஆலய அமைப்பு, விழாவமைப்பு முதலியவைகளை ஏற்படுத்தி உள்ளான் என்று கூறினால் அது மிகையல்ல.

பின்னுரை : இதுவரை ஆலய அமைப்பைப் பற்றி வளர்ச்சி வரலாறு, ஆகம நூல் ஆதாரம், தத்துவப் பொருள் என்ற பகுதிகளில் கூறினோம். இவைகளே யன்றி சிற்பம், ஓவியம், இன்னிசை, பண்டைக் கலை முதலிய அருங் கலைகளில் ஆலயம் எவ்விதச் செல்வக் களஞ்சியமாக இருக்கிறது என்று ஆராய்வது மற்றொரு முறையாகும். தென்னாட்டுக் கோயில்களில் உள்ள சிற்பச் செல்வம் வேறெங்கும் இல்லை என்றே சொல்லலாம். கல்லும் கவி சொல்லும் என்ற இந்த ஆலயங்களைத்தான் கூறவேண்டும். கல்லும் சொல்லாதோ கவி என்று புலவன் கூறினால் இந்தச் செல்வத்தை நன்கு அறிந்தே சொன்னான் என்க. மாமல்லை, காஞ்சி, மதுரை, வேலூர், நாகமங்கலம், பேரூர், நெல்லை, கிருட்டிணபுரம் முதலிய கோயில்களைப் பார்த்தவன் வேறு எதனைப் பார்க்க வேண்டும். இளாபுரி, சிற்றன்னை வாசல், சீயகிரி ஓவியங்களைக் கண்டு துய்த்தவன் ரோமாபுரிக்குச் செல்ல வேண்டுமா ? தென்னாட்டுக் கோயிற் பண்டாரங்களில் உள்ள இன்னிசை இயங்களைக் கண்டவன் காட்சிச் சாலைகளுக்குப் போகவேண்டுமா. திருத்தேர்களில் காணும் மரத்திருவுருவங்களைக் கண்டவன் தச்சரின் உயர்ந்த மூளையைச் சோதிக்கச் செல்ல வேண்டுமா. பேரூர் போன்ற பண்டைத் தலங்களில் தோண்டினபோது

கிடைத்த பண்டைய புதைப் பொருள்கள் கலை ஆராய்ச்சிக்கு ஒப்பற்ற திரவியங்களாகப் பரிமளிக்கிறதைக்கூறவும் வேண்டுமா? உரோமானிய நாணயங்கள், மாண்டவர் குழிகளில் கிடைத்த பண்டை எலும்புகள். மண்பாத்திரங்கள், நகை நட்டுக்கள் தமிழர் பண்பாட்டிற்கு ஒப்பற்ற சான்றுகளாக ஏற்படுகின்றன அல்லவா. இவைகள் எல்லாம் ஆராய்ச்சிக்குரிய அரிய செல்வங்கள் என நாம் அறிய வேண்டும். இவைகள் ஆலய அமைப்பின் சின்னங்களாக நமக்குக் கிடைக்கின்றன.

இனி கோயில்களைக் கட்டி வைத்து அவைகளைத் தக்கபடி பராமரிப்பு செய்யாவிடில் அவைகள் அழிந்து போவதன்றி மக்களுக்குப் பயனும் தராதன்றோ. அவைகளைக் கட்டின முன்னோர்கள் பராமரிப்பு முதலியவைகளில் தக்க ஏற்பாடுகள் செய்து வந்தார்கள், ஆலயங்களைச் சமய நிலையங்களாகவும் உலகிய நிலையங்களாகவும் செய்து வைத்தார்கள். சமய நிலையங்களாகச் செய்ய அர்ச்சகர் முதல் கொண்டு திருவாடு வரைக்கும் ஊழியர்களை ஏற்படுத்தி அவர்களுக்கு ஊதியங்கள் தந்து மானியங்களை வைத்தனர். அவைகளைத் தக்கபடி பரிபாலிப்பதற்கு அதிகாரிகளையும் வைத்தார்கள். குற்றஞ் செய்தவர்களைத் தண்டிப்பதற்கு மன்றங்களையும் வைத்தார்கள். திருவிழாக்கள், சமய பிரசாரங்கள், சமயநூல் ஓதுதல், திருமுறை ஓதுதல் முதலியவைகளுக்கு ஆட்களும் வருவாயும் ஏற்படுத்தினர்கள். இச்செய்திகள் பல்லவர் காலம் முதற்கொண்டே நடைபெற்று வருகின்றன. சோழர் பாண்டியர் காலங்களில் வெகு விவரமாகவே சாசனங்களில் ஏற்படுத்தி வந்திருக்கிருர்கள். அக்காலங்களில் இருந்த ஆலய பரிபாலனத்தில் ஒரு கூறுகூடத் தற்போது இல்லை என்றே கூறவேண்டும். தாங்கள் ஏற்படுத்திய அமைப்பு அழியாமல் இருக்கும் பொருட்டுக் கணக்கற்ற விதிகளையும் தண்டனைகளும் எழுதி வைத்திருந்தார்கள் இந்த முறையில் ஆலய பரிபாலன அமைப்பு இருந்தது.

மேலும் உலகிய செய்திகளிலும் ஆலயம் ஒரு நடுநாயகம் ஆக அமைப்புப் பெற்றிருந்தது. ஒரு ஊரை எடுத்துக் கொண்டால் அவ்வூர்ப் பரிபாலனம் பெரும்பாலும் கோயிலை வைத்துக்கொண்டே செய்யப்பட்டது. கோயில் சபையானது ஊர்ச்சபையாகவே அமைப்பு பெற்றிருந்தது. வீடு

அமைப்பு, புது வீடுகள் இடம் தரல், நெசவு முதலிய தொழிலாளர்களுக்குச் சலுகை தரல், கல்விக்கும் மருத்துவத்திற்கும் வகை செய்தல், நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சல் அதனைப் பிரிவினை செய்து பரிபாலித்தல், விளைபொருள்களைப் பங்கு கொடுத்தல், வரி முதலியவைகளை வாங்குதல். அவைகளை இறைவனுக்கு அளித்தல், பஞ்ச நாட்களில் வரி சகாயம் செய்தல், குற்றங்களை விசாரித்துத் தண்டித்தல் முதலான பல பல உலகீய விவகாரங்களையும் கோயில் சபையார்களே நடத்தினர்கள் என்றால் கோயில் அமைப்புத் திட்டத்தின் பெருமை உரைக்கத்தகுமோ ? இத்தனை விரிவான நோக்கங்களைக் கொண்டு கோயில் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது என அறிக.

ம. பா. இரங்கல் உரை*

சென்னையில் தம் இல்லம் 150,கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் மயிலை மாதவதாஸர், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஈசன் திருவடி நீழல் அடைந்தது நாட்டுக்கும், தமிழுக்கும், சைவ வைணவ சமயத்திற்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு. உன்னத குடும்பத்தில் தோன்றிய இந்தப் பெரியார், வழக்கறிஞர் வாழ்க்கையைக் காலஞ் சென்ற பெயர்பெற்ற வழக்கறிஞர் திரு. அல்லாடி கிருஷ்ண சாமி அய்யரிடம் தொடங்கி அதில் பெருமையுடன் விளங்கும் சமயத்தில், அன்று நாட்டில் இருந்த நிலைமையை அறிந்து, சிறிது காலம் சென்னைச் சட்டசபை அங்கத்தினராக இருந்து நல்ல பணி ஆற்றினர். அன்று காங்கரசிற்குக் கடுமையான காலம். அதன் கொள்கை பிடிக்காத பலர் அதற்கு இன்னல்கள் செய்துவந்த சமயம் திருவாளர் முதலியார் அவர்கள் நடுநிலை பிறழாமல் காங்கிரசிற்கு உள்ளுரத் தைரியமாகத் தொண்டு ஆற்றி வந்தார். ஆனல், திருவாளர் முதலியார் மனம் சமயத்தொண்டிலே தீவிரமாக ஈடுபட்டு வந்தது.

முதலியார் அவர்கள் வேதாந்த சித்தாந்த சாத்திரங்களை நன்றாகக் கற்று வந்தவர். கடைசிவரை அந்தப்

---

*இது, விளம்பிஹு சித்திரைமீ 22-ல் வெளிவந்த தேவஸ்தானம் பத்திரிகையில் குன்னூர் - S. R. சுப்ரமண்யம் எழுதியது.

படிப்பை அவர் விடவே இல்லை. நல்ல சைவர் ஆனதால் அதன் காரணமாக வைணவப் பற்றும் அவரிடத்தில் நன்றாகப் பரிணமித்தது. சைவ சித்தாந்தத்திற்கும் வைணவ சித்தாந்தத்திற்கும் ஒற்றுமை பல பல உண்டு. ஆகவே நாம் இக்காரணமாகச் சச்சரவு எக்காலமும் செய்யக் கூடாது - என்பதை அடிக்கடி அவர் மேற்கோள் காட்டிச் சொல்வதுண்டு. முழுக்க முழுக்கச் சைவ சித்தாந்தியாக இருந்த இவருக்கு உடையவராகிய இராமாநுஜரிடம் இருந்த பற்று, வணக்கம், பக்தி அளவிட முடியாது. "உடையவர் வைபவம்" என்பது பற்றி அவர் குன்னூர் ஆலயத்தில் மக்கள் மெய்ம்மறக்கும்படி சொற்பொழிவாற்றினது இக்கட்டுரையாளர் முன் இன்னும் தோன்றுகிறது.

திவ்ய ப்ரபந்தத்தை நல்ல கட்டுக்கோப்புடன் அடக்க விலையான ரூ. 1-50 க்கும் பிறகு ரூ. 2-50க்கும் பல அரிய அநுபந்தங்களோடு வெளியிட்டார். திருப்பாவையை எல்லா வியாக்கியானங்களோடும் வெளியிட்டார். தேவார அடங்கன் முறை 8250 பாடல் முழுவதும் நல்ல ஆராய்ச்சி முறையில் வெளியிட்டார்.

அந்த அன்பர் வேனிற் காலத்திற்குக் குன்னூர் வரும் சமயம் கூப்பிட்ட இடம் சென்று சொற்பொழிவாற்றி வந்தார். சைவ சித்தாந்த மகா சமாஜமும் அதன் மாத வெளியீடு "சித்தாந்த"மும் கொண்டுவருவதற்கு மூல புருடராயிருந்த சீலம் மிகுந்த சைவர், நிறைகுடம் தளும்பாது என்பதற்கு உதாரண புருடராக விளங்கினார். பண்பும் பணிவும் உள்ள இந்த அன்பர் இன்னும் எவ்வளவோ தொண்டு செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். தமிழ் மொழியின் பெருமையை வெளிக்கொண்டுவரத் தினம் ஒரு மணி நேரம் தொண்டு செய்யச் சம்மதித்தால்கூட நூற்றுக் கணக்கான பண்டிதர்களுக்கு வேலைகொடுக்க முடியுமென்று எவ்வளவோ தடவை இந்த தாசனிடம் அவர் சொன்னதுண்டு. தமிழ்ப் பற்றுடைய மக்கள் இந்தத் தொண்டைத் தொடங்கி நடத்துவதே பிரிந்துபோன இந்தத் தமிழ்ப் பெரியார்க்குச் செய்யும் ஞாபகார்த்த நன்றியாகும்.

தமிழ் நாட்டிலுள்ள பல பெரிய தமிழ்ப் பண்டிதர்களையும் பொருளாதார, ராஜீய, சமூகப் பெரியவர்களையும் திருவாளர் முதலியார் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

எல்லோருக்கும் உதவும்படியாகத் தனது 60-வது ஆண்டு பூர்த்தியான தருணம் இலவச வெளியீடாகச் சைவ வைண வப் பாடல்கள் நிறைந்த புத்தகம் ஒன்றையும் வெளியிட் டார். திருப்பாதிரிப்புலியூர் மடத்துப் பீடத்தைத் திவ்ய தேஜசுடன் அலங்கரித்த ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளிடம் இவருக்கிருந்த பணிவுகலந்த மரியாதையும், தன்குல தெய்வ மாகிய முருகக் கடவுளாகிய திருப்போரூரில் எழுந்தருளி யிருக்கும் முருகனிடம் பக்தியும் கொண்டவர். பல பத்திரிகைகளுக்குக் கேட்ட அளவில் விஷயதானம் சமயச் சார்பாக எழுதியிருக்கிறார். திருப்பனந்தாள் மடத்துச் சைவ சித்தாந்த சொற்பொழிவு காசியிலும் அலகாபாதி லும் ஒருவருடம் சென்று சொற்பொழிவாற்றி வந்தார். இவருடைய சிரமத்தால் கொண்டுவரப்பட்ட புத்தகங்களை மக்கள் வாங்குவதோடு இவர் ஞாபகம் மறவாமலிருக்கச் சமயப் பற்றுள்ள இருசமயத்தாரும் இவருக்கு நன்றி செலுத்தவேண்டியது கடமை.

மயிலை மாதவ தாசர் நாமம் வாழ்க!

சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை.

[1905-ல் பதிவு செய்யப்பெற்றது]

விண்ணப்பம்

சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்ற ஐம்பத்து மூன்று ஆண்டுகளாக, தனித்ததொரு கட்டிட அமைப் பின்றி, தனசேமிப்பு அதிகமின்றி, சமய நூல்களையும், சங்க இலக்கிய நூல்களையும் பல்லாயிரமாக அடக்கவிலைக்குப் பதிப்பித்து மக்களுக்கு வழங்கிச் சைவ சமய உண்மைகளைப் பல துறைகளிலும் பரவச் செய்து வருவது யாவரும் அறிந்ததே. அத்தகைய சிறப்பிற்குப் பெருங் காரண கர்த்தராக விளங்கியவர் காலஞ்சென்ற சமாஜத் தலைவர் **திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள்** என்பது சைவ சமய மக்களே யன்றி மற்றையோரும் அறிந்த உண்மையே. முதலியாரவர்கள் படித்த பள்ளியின் பழைய மாணவர் சங்கத்திற்குப் பல்லாண்டுகள் தலைவரா யிருந்து பணியாற்றிய பெருமையை இன்றும் திருமயிலை

பி. எஸ். உயர்தரப்பள்ளியில் போற்றுகின்றனர். தம்முடைய வழக்கறிஞர் பதவியினின்றும் விலகிச் சமாஜத்திற்கென்றே தமது வாழ்க்கையை அர்ப்பணித்த முதலியாரவர்களுக்குச் சைவப் பெருமக்கள் நன்றி புரியக் கடமைப்பட்டுள்ளனர். அதற்கென, சென்னை அரசாங்க அமைச்சர் கனம் திரு. எம். பக்தவத்சல முதலியாரவர்கள் தலைமையில் பி. எஸ். உயர்தரப்பள்ளியில் 6–4–1958ல் கூடிய இரங்கற் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்திற் கிணங்க அப்பெரியார் செய்த பேருதவியின் பெருமை நிலைத்திருக்கும் வண்ணமும், அவர் வளர்த்த சமாஜம் மேன்மேலும் சிறப்புற்றுப் பணியாற்றவும் ஒரு கட்டிடம் சென்னையில் அவர் பெயரால் அமைக்கப்படவேண்டுமென்று பலரும் விரும்புகின்றனர். அவ் விருப்பம் நிறைவேறப் பலருடைய பொருளுதவி பெரிதும் வேண்டற்பாலது. பல சைவப் பெருமக்களும் இக்கோரிக்கையை நிறைவேற்ற முன்வரவேண்டுமென்பதே சமாஜ அங்கத்தினர்களுடைய விண்ணப்பம்.

பொருளுதவி புரிய விரும்புவோர் சமாஜச் செயலாளரிடமோ, அல்லது அதற்கென அனுமதிபெற்ற அங்கத்தினர்களிடமோ பணம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம். பொருளுதவி செய்யும் அன்பர்களுடைய பெயரும் அவர்கள் தந்துதவும் தொகையும் மாதந்தோறும் "சித்தாந்த"த்தில் வெளியிடப்படும்.

இவ்வரிய செயலுக்கு :

திரு. மயிலை - சுப்பிரமணிய முதலியார், B.A., B.L. அவர்கள்
,, மணலி - இராமகிருஷ்ண முதலியார், B.A. அவர்கள்
,, ராவ்சாயப் - நல். முருகேச முதலியார், B.A. அவர்கள்
,, ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T. அவர்கள்
,, அ. சோமசுந்தரஞ் செட்டியார், M.A. அவர்கள்
,, மயிலை - சம்பந்த முதலியார் அவர்கள்
,, பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், M.A. அவர்கள்
,, ஐய்யா சுப்பிரமணிய முதலியார் அவர்கள்

ஆகியோர்கள் அடங்கிய செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது.

28, பிராடீஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4

மா. ப. தியாகராஜன்,
செயலாளர்.

தாயுமானார்

II

தாயுமான சுவாமிகளின் சரித்திரத்தில் நாம் அறிய வேண்டிய உண்மை என்ன என்பதை விசாரிக்க வேண்டியது அவசியம். கடவுள் உடலையும் உலகத்தையும் கொடுத்தது உயிர் கடைத்தேறுவதற்காகும். உலகத்தில் நாம் எவ்வளவு பெரிய பதவியிலிருந்த போதிலும் அஃது உடலுக்கு நலமே ஒழிய உயிருக்கு நலந்தருவதல்ல. உயிரைப்பற்றி நமக்கு இவ்வுடல் கிடைத்ததாகையால் இவ்வுடல் நல்ல நிலையிலிருக்கும்போதே உயிரைப்பற்றி விசாரிக்க வேண்டியது நமது கடமை. ஆகையால் உலக விவகாரங்களிலிருந்து விலகிக் கொண்டபோது பார்த்துக் கொள்ளுவோம் என்று தள்ளி வைக்காமல் சிறுபோதிலேயே நாம் உயிரைப்பற்றி விசாரிக்கவேண்டும்; ஞான நூல்களை கற்கவேண்டும்; அதன் பயனாகத் துன்பத்தைப் போக்கி இன்பத்தை அடைய வேண்டும். இவ்வுண்மைகளையே சுவாமிகளின் சரித்திரத்தில் காண்கிறோம். எனவே பலர் சென்று தேய்ந்த வழியில் செல்வதே நலமென்ற உண்மைபோல் சுவாமிகளைப் போன்ற பல பெரியோர்கள் சென்ற வழியே நாம் போக வேண்டுமென்பதை நாம் அறிந்து அவ்வழியில் சென்று கடைத்தேறுவோமாக.

தாயுமானாரைப்பற்றி விசாரிக்க வேண்டிய காரணங்களையும் அவர் சரித்திரத்தில் நாம் அறியவேண்டிய உண்மைகளையும் ஆராய்ந்தோம். இனி அவர் இயற்றியுள்ள பாடல்களில் அறிய வேண்டியவற்றை நாம் ஆராய்வோம். நாம் பிறந்திருக்கின்ற இவ்வுலகம் கர்மங்கள் செய்வதற்கும், அவற்றின் பலன்களை அனுபவிப்பதற்கும், ஞானத்தைப் பெற்று வீடு பெறுவதற்கும் யோக்கியமானதாதலால் இதற்குக் கர்மபூமி என்ற பெயர் வழங்கப்படுகிறது. சுவர்க்கத்தில் போகம் அனுபவிக்கின்றவர்களும் நரகத்தில் துன்பம் அனுபவிக்கின்றவர்களும் இக்கர்ம பூமியில் வந்து பிறந்தாலொழிய வீடுபேறடைய வழியில்லை. இக்கர்ம பூமியில் உள்ள பிறவிகளில் தலை சிறந்தது மனிதப் பிறவியாகும்.

> " எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
> யாதினும் அரிது அரிது காண் "

இம் மனிதப்பிறவியில் இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று ஈசன் அருள் இல்லாத காலம். மற்றொன்று அவனுடைய அருள் தோன்றிய காலம். இதைத் தாயுமானர்,

“ ஐந்துவகை யாகின்ற பூதபே தத்தினு
லாகின்ற வாக்கை நீர்மேல்
அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநா
னறியாத கால மெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
போந்தநெறி யென்றி ருந்தேன்
பூராய மாகநின தருள்வந் துணர்த்தவிவை
போனவழி தெரிய வில்லை
எந்தநிலை பேசினு மிணங்கவிலை யல்லா
லிறப்பொடு பிறப்பை யுள்ளே
எண்ணினு னெஞ்சது பகீரெனுந் துயிலுறு
திருவிழியு மிரவு பகலாய்ச்
செந்தழலின் மெழுகான தங்கமிவை யென்கொலோ
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணுமூர்த்தியே
சின்மயா னந்த குருவே ”

என்ற பாட்டில் விரிவாகக் கூறுகின்றார். இப்பாடல் நமது ஆரம்ப நிலையைத் தெரிவிக்கிறது. ஈசனுடைய அருள் இல்லாத காலத்தில், அதாவது அறியாமையினுல் மூடப்பட்டிருந்த காலத்தில் மக்கள் உண்பதும் உடுப்பதுமே இன்ப நிலை என்றிருந்து, ஈசனுடைய அருள் சற்றுத் தோன்றிய காலத்தில் உலக இன்பங்களெல்லாம் நிலையற்றனவென்றெண்ணி நிலைத்த இன்பத்தைத்தேட முயன்று அநேக நிலைகளை ஆய்ந்து ஒரு நிலையிலும் மனத்திடப்படாமையால் இறப்பையும் அதற்குப் பின் இருக்கும் பிறப்பையும் அதனுல் வரும் பல துன்பங்களையும் உன்ன நெஞ்சம் துடித்து இரவு பகல் தூக்கமின்றி உடல் மெலிந்து இருக்கும் நிலையை இப்பாடல் தெரிவிக்கின்றது.

இம்மனித உடலைப் பெற்று நாம் அடைய வேண்டிய பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. இவற்றை அடைதலினுல் வரும்பயன் ஞானம்.

" புருஷர்பெறு தர்மார்தி வேதமுடி ஞகமம் புகலுமதி லாம்பயன்
ஞானநெறி முக்ய நெறி "

என்ருர். இப் பிறவியெடுத்து அறிய வேண்டிய அப் பொருள்களை அறியாவிடில் அவன் பேதையாகின்ருன். இதைத் தாயுமானுர்,

" புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
புருஷார்த்த மேது மில்லேன் " ஆதலால்,

" ஆணிலே பெண்ணிலே யென்போல வொருபேதை
யகிலத்தின் மிசையுள்ளதோ " என்ருர்.

உலக நடையைச் சிந்தித்தபோது உலகம் பொய் நெறியைப் பற்றி ஒழுகுகின்றது. பொய்யுடல் காரணமாக உண்பதற்கு அலைந்து உண்டபின் தூங்கி இதுவே செய்தவமென்றெண்ணியிருக்கின்றதென்று சுவாமிகள் வருந்துகின்ருர். இதை,

" பொய்திகழு முலகநடை யென்சொல்கே னென்சொல்கேன்
பொழுதுபோக் கேதென்னிலோ
பொய்யுடல் நிமித்தம் புசிப்புக் கலேந்திடல்
புசித்தபின் கண்ணுறங்கல்
கைதவம லாமலிது செய்தவம தல்லவே
கண்கெட்ட பேர்க்கும் வெளியாய்க்
கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்
காலமோ வதையறி கிலேன் "

என்ற பாடலில் அறிவிக்கின்ருர்.

தான் குணமொன்று மில்லாதவனென்றும், தீயகுணங்கள் பல உடையவனென்றும், பயனற்ற கூட்டங்கள் பலவற்றில் சேர்ந்துள்ளவனென்றும்,

" குணமொன்று மொன்றி லேன்பால்
கோரமெத் தனைபக்ஷ பாதமெத் தனைவன்
குணங்களெத் தனைகொடிய பாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்
காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை
கதிக்கென் றமைத்த வருளிற்

செல்லாமை யெத்தனை விர்தாகோஷ்டி யென்னிலோ
செல்வதெத் தனைமுயற்சி
சிந்தையெத் தனைசலன மிந்த்ரசா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சை முதலாய்
அல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
யானே னிவைக்கு மாளாகவோ "

என்ற பாட்டில் சொல்லுகின்றார். உலக நடையைப் " பொய்யான உலகத்தை ", "பொய்யாருலக நிலை", "பொய் திகழு முலகநடை" என்று பல முறை கூறுகின்றார். ஆகவே தாயுமானார் முதலில் தன்னைப் பார்த்தார்; பின், பிறரைப் பார்த்தார்; அதன் பின் உலகத்தைப் பார்த்தார். ஈசன் அருள் இல்லாத காலத்தில் தன் நிலையையும், அது தோன்றிய காலத்துத் தன் நிலையையும், புருஷர் வடிவெடுத்தும் புருஷார்த்தமில்லாததினால் தன்னைப் போன்ற பேதை பிறர் இல்லை என்பதையும், உலகமோ பொய்யான நடை யுடையது, உண்டு உடுத்து உறங்குவதே இன்ப நிலை என்று இருக்கிறது என்பதையும் அறிந்தார்.

தாயுமானார் தெய்வத்தைப் பற்றி என்ன கொள்கை யுடையவர் என்பதை நோக்குவாம்:

" ஊரனந் தம்பெற்ற பேரனந் தஞ்சுற்ற
முறவனந் தம்வினையினால்
உடலனந் தம்செயும் வினையனந் தம்கருத்
தோவனந் தம்பெற்றபேர்
சீரனந் தம்சொர்க்க நரகமும் மனந்தநற்
றெய்வமு மனந்த பேதம் "

" ஒருவனாகிய சிவபிரான் "

" மைவிடா தெழுநீல கண்டகுரு வேவிஷ்ணு
வடிவான ஞான குருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே "

" சித்தம் அறியாதபடி சித்தத்தில் நின்றிலகும்
திவ்விய தேஜோ மயத்தை "

" பாசா டவிக்குளே செல்லாத வர்க்கருள்
பழுத்தொழுகு தேவதருவே "

" கருதரிய ஆனந்த மழைபொழியு முகிலைங்
கடவுளைத் துரிய வடிவை "

" ஆறுசம யங்கள்தொறும் வேறுவே ருகி விளையாடுமொன "

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத் தன்மை நாமம்
ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின் றியக்கஞ்
சோதியை " [செய்யும்

" அகரவுயி ரெழுத்தனைத்து மாகிவேரு
யமர்ந்ததென அகிலாண்ட மனைத்து மாகி."

இம்மொழிகளால் கடவுள் ஒருவனே, அவன் சிவன், அவன் மக்கள் அடைந்துள்ள பக்குவ நிலைக்கேற்றபடி பல பேதப்பட்ட உருவங்கள் கொண்டிருக்கின்ருன் ; அவ்வுருவங்கள் கருணையினுல் தானே மேற்கொண்டவையே ஒழிய பிறரால் கொடுக்கப்பட்டவையல்ல ; அவன் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் அறியாதபடி தங்கியிருக்கின்ருன் ; அவனை அறிய அவன் அருள்வேண்டும் ; உலக போகத்தில் பற்றில்லாதவர்க்குத்தான் அவன் அருள் கிடைக்கும் ; அது கிடைத்து விட்டால் அவன் மக்களுடைய துன்பத்தைத் துடைத்து இன்பமாகிய மழையைப் பொழிகின்ருன்; அவன், தான் தொழிற்படாமல் தன் முன்னிலையில் படைத்தலாதி முத்தொழில்கள் நிகழச் செய்கின்ற துரியவடிவினன் ; அவன் ஆறு சமயங்களிலும் வேறு வேருக நின்று அன்பர்களை ஆட்கொள்ளும் விளையாட்டையுடையவன் ; அவன் சாதி, குலம், பிறப்பு, இறப்பு, பந்தம், முத்தி, அருவுருவத்தன்மை, நாமம் முதலிய ஏதுமில்லாதவன் ; அகர உயிர்போல் தான் யாராலும் இயக்கப்படாமல் எல்லா உயிர்களிலும் மறைந்திருந்து எல்லா உயிர்களையும் இயக்குகின்றவன் என்னுமுண்மைகளைத் தாயுமானுர் அறிவிக்கின்ருர்.

தாயுமானுர் உயிர்களைப் பற்றியும் பாசத்தைப் பற்றியும் பின் வருமாறு பேசியிருக்கின்ருர். உயிர்கள் கடவுளால் படைக்கப்படவில்லை. உயிர்கள் இறைவனைப் போல் அனுதியானவை ; அவனுக்கு அடிமைப்பட்டவை என்பதை " என்று நீ அன்று நான் உன் அடிமை அல்லவோ " என்ற மொழியால் அறிகின்ருேம். ஆனுல் உயிர்கள் மல சம்பந்தத்தால் சிற்றறிவுடையனவாயிருக்கின்றன. தன்னையும்

பிறரையும் காட்டாத ஆணவ மலமாகிய இருட்டறையில் கண்ணில்லாத குழவியைப்போல் கட்டுண்டிருந்தன. நாகத்தின் விடத்தைப் போல் அவ் ஆணவமலம் கௌவினதால் அவை மயங்கிக் கிடந்தன. கடவுள் கருணையினால் உயிர்களுக்கு உடலைக் கொடுத்து உலகத்தில் போகவிட்டு, உயிர்கள் நல்ல வழியில் நடக்க வேதங்களைக் கொடுத்து, மறைமொழிக்குத் தப்பி நடக்கும் உயிர்களைத் தண்டித்துக் கடைசியில் துன்பத்தை நீக்கி நினைப்பு மறப்பில்லாத பேரின்ப வீட்டில் இசைந்து துயில் கொள்ளத் துணைசெய்கிறார் என்ற உண்மைகளைச் சுவாமிகள் கீழ்வரும் மொழிகளால் விளக்குகின்றார்.

" காரிட்ட ஆணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவி யைப்போல்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கி சைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவிளை யமுத மூட்டிப்
பெரியபுவ னத்திடைப் போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்ட மைத்திட்டு
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்
டிடருற வுறுக்கி யிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில்கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே "

" கௌவுமல மாகின்ற நாகபாசத்திலே "

" உன்னிலையு மென்னிலையு மொருநிலை யெனக்கிடந்
துளறிடும வத்தையாகி
யுருவுதான் காட்டாத ஆணவமும்."

ஆணவத்திற்கு ஏழுவேகங்கள் உண்டு. அவைகளில் ஒன்று குருவால் உபதேசிக்கப்பட்டும், தக்க நூல்களை வாசித்தும், கேட்டபடியும் கற்றபடியும் நடக்காமல் செய்வது ஒரு வேகம். உயிர்கள் அநாதியானவை யானபோதிலும், ஜாதி குலம் பிறப்பு இறப்பு இல்லாதவை எனினும் பொன்போன்ற கடவுளுக்கு இணையாகா ; அவனுக்கு அடிமைப்பட்டவையே ; பொன்னுக்குக் களிம்புதோய்

செம்பு இணையில்லாததுபோல், கடவுள் அச்செம்பாகிய உயிரை ஞானமாகிய அனலில் காய்ச்சிக் களிம்பைப் போக்கடித்துத் தன்னுடைய அருளான குளிகையினுல் பரிசித்து வேதிசெய்து தன்னைப்போல் தங்கமாக்கிக் கொள்ளுகிருன் என்ற உண்மையை,

" கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்
களிம்புதோய் செம்ப னையயான்
காண்டக விருக்கநீ ஞானவனல் மூட்டியே
கனிவுபெற வுள்ளு ருக்கிப்
பருவமத றிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதி செய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை என்சொல் லுவேன் "

என்ற பாட்டில் விளக்குகின்ருர்.

உயிரைப்பற்றி யிருக்கின்ற பாசம் நீங்க, சமயம் என்ற ஒரு நெறியைப் பற்றவேண்டும். உலகத்தில் பல சமயங்கள் உள. அவைகளில் தலைசிறந்தது சைவமாகும். ஏனென்ருல் சைவம் சிவ சம்பந்தமானது. இஃதே ஆதியில் இருந்த சமயம். மங்கள குண முடைமையும், அஞ்ஞானம் இல்லாமையும், ஞானம் முற்றும் உடைமையும் ஆகிய இலக்கணங்களையுடையது சிவமாகும்.

" குறைவிலா மங்கள குணத்த னுதலின்
நிறைமலம் அனுதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன் என "

என்ருர் சிவஞான முனிவர். இந்த இலக்கணங்களையுடையவராகக் கடவுளை வழிபடும் சமயம் எதுவாயிருப்பினும் அஃது சைவமாகும். உலகத்திலுள்ள பல பல சமயங்களும் " ஒன்று சொன்னபடி ஒன்று பேசாது." பல சமயங்களும் மக்களுடைய பக்குவத்திற் கேற்றபடி கடவுளால் வகுக்கப்பட்டன. ஒவ்வொரு சமயத்திலுள்ளவர்களும் தத்தம் சமயக் கொள்கைகளே முடிவான கொள்கைகளென்று வீணுகப் பேசுவார்கள்.

" சைவமுதல் அளவில் சமயமும் வகுத்து "

" ஸ்திரமென்று சந்ததம் தம் மதத்தையே
தாமதச் செய்கையொடு உளற அறிவார் "

என்றார் தாயுமானார்.

எச்சமயத்தைப் பற்றி ஒழுகினாலும் மனம் ஒடுங்கும்படி கற்கவேண்டும். ஏனெனின் மனம் ஒடுங்கினால் வீட்டு நெறிக்கு ஏதுவாகும்; ஒடுங்காவிட்டால் பிறப்புக் கேதுவாகும். அருணகிரியாரும் " சும்மா இரு சொல்லற " என்றார். தாயுமானாரும்,

" சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே "

என்றருளியிருக்கிறார். அவர் வாக்கைக் கடைப்பிடித்து நாம் உய்வோமாக.

——

ஞானியார் நினைவு மலர் : கட்டுரை 14

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளின்

தலைமைப் பேருரை*

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

மெய்யன்பர்களே !

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 32-ஆம் ஆண்டு நிறைவிழா இன்பத்தை அனுபவிக்க நாம் எல்லோரும் இங்குக் கூடியிருக்கிறோம். 1913-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில்

---

*வேலூரில் 1937ஆ டிசம்பர்மீ 29, 30, 31-ம் தேதிகளில் கூடிய சைவசித்தாந்த மகாநாட்டில் தலைமை வகித்த திருக்கோவலூர் ஆதீனம் - ஞானியார் மடாலயத் தலைவர் - திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் நிகழ்த்திய முன்னுரைச் சுருக்கம். திரு. G. கலியாணம், M.A., Dip. Econ. அவர்கள் குறிப்பு.

நடந்த சமாஜ ஆண்டு விழாவில் அடியேனை இந்த இடத்தில் நிறுத்தினீர்கள். இப்பொழுதும் இந்நிலையில் இருக்கச் செய்தீர்கள். இதற்குக் காரணம் உங்கள் அன்பே. அன்பு காரணம் என்று மாத்திரம் சொல்லிவிடலாமா? அன்பு மட்டுமல்ல; இறைவன் திருவருளும் துணை செய்தது. ஆண்டவன் அருளும், அன்பர்கள் அன்பும் சேர்ந்த விடத்தே நற்செயல் நடைபெறும். இவ்விரண்டும் கூடிய விடத்து அடியேன் அடங்கித்தானே யாகவேண்டும்! நாம் இங்கே சைவசித்தாந்தம் பேசுகிறோம்; கேட்கிறோம். நாம் என்றால் உடலா? கேட்கும் சக்தி அறிவிற்கிருந்தாலும் அது ஒரு கருவி கொண்டே கேட்கவேண்டும். சரீரமில்லையானால் நாம் கேட்கத் தகுந்தவர்கள் அல்ல. அறிவற்ற உடல் ஒன்றும் செய்யாது. அல்லது சரீரமில்லாத காலத்தில் உயிர் ஒன்றும் செய்ய இயலாது. அரசன் மந்திரியையுடையவனால் குடிகளுக்கு நன்மை செய்ய முடியும். மந்திரி முதலியோர் இல்லையேல் அரசன் என்செய வல்லான்! "அமைச்சர சேய்ப்ப நின்றஞ் சவத்தைத்தே" என்று கூறும் சிவஞானபோதம். ஆராய்ச்சியினால் நன்று என்று புலப்படும் விஷயங்களைப் பற்றிப் பேசவும், கேட்கவும் ஆவல் கொள்ள வேண்டும். கண்ணினால் பார்ப்பதைவிடக் கேட்பது மேலானது. கேட்டதை ஆராய்ந்தறிவது அதனினும் உயர்ந்தது. நமக்குள் இருக்கும் மனம் புத்தி இவைகள் சடவஸ்துக்கள். புத்தி கண்ணாடி போன்றது. அதற்குச் சுயமான செய்கை கிடையாது. புத்தி அறிவுடன் சேர்ந்த பொழுதே அறிவின் செயல் பிரதிபிம்பிக்கிறது. அறிவு சேர்ந்தால்தான் புத்தி தன் வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறது. அறிவில்லாமல் உறுப்புக்கள் தங்கள் வேலையைச் செய்து பார்த்தால் ஒன்றுமே குணப்படாது.

அன்பர்களே! பொருள்கள் மூன்று வகையன. அவை மானிடர்களாகிய யாம், நாம் பார்க்கக்கூடிய பொருள்கள், ஆராய்ச்சியால் அடையக்கூடிய பொருள்கள் என்பன. கண்ணால் பார்க்கக்கூடிய பொருள்கள் அறியுந் தன்மையுடையன. உயிரிடத்திலிருக்கும் உயர்ந்த பொருளை ஆராய்வதே அருமையாகும். உலகத்தில் காணப்படுபவைகளை ஐம்புலன்களால் இழுத்து அறிவு முதலியவைகளைக்கொண்டு ஆராய வேண்டும். "மாற்றம் மனம் கழிய நின்ற மறை

யோன்'' என்ற திருவாசக அடியைக் கவனிக்க வேண்டும் அடியேன் உங்களைப் பார்க்கவில்லை. உங்கள் உடலைப் பார்க்கிறேன். அழிவதையே அடியேன் நோக்குகின்றேன். உயிரையே பார்க்க முடியாதென்றால், உயிர்க்குயிரான கடவுளைக் காணுதல் எளிதோ! எக்காலத்தும் யாரும் பார்க்க முடியாததென்றால் அது சூனியமாகும். எக்காலத்து யாவரும் பார்க்கக்கூடிய நிலையான பொருள் கடவுள் என்பதை ஞான சம்பந்தர் காட்டினார். அவர் பார்ப்பார்; மற்றவர்க்கும் காட்டுவார். தன்னையறிந்தால் அல்லது உலகத்தையறிந்தால் மாத்திரம் ஞானமாகாது. மறைந்து கிடக்கும் பரவஸ்துவைக் காணுவதே ஞானம். கடவுளை நாம் காணலாம்; தொடலாம்; ஆராயலாம். ஆராய்வதற்குச் சாதனங்கள் என்ன? ஒருவன் தலையில் நெருப்புப் பிடித்துக் கொண்டால், எந்தத் தண்ணீர் என்றும் பாராமல் உடனே ஊற்றிக் கொள்வதுபோல், ஆராய்ச்சி செய்யுங்கால், தான் கொண்ட எண்ணம் ஈடேறும் வரை அதைத் தேடியடைய வேண்டும். ஆண்டவனை அலைந்து திரிந்து, தேடித் தேடி, ஏங்கி ஏங்கி அழுதாற் பெறலாம். திருவுந்தியாரில்,

"உள்ள முருகி னுடனுவ ரல்லது
தெள்ள வரியரென் றுந்தீபற
சிற்பரச் செல்வரென் றுந்தீபற"

என்று கூறியிருப்பது காண்க. ஆனந்த வெள்ளம் உள்ளேயிருக்கிறது. 'வெள்ளத்தின் நடுவே யிருந்தும் நீர் பருகாது தாகத்தால் நாவானது உலர்ந்து போனாற்போல உன் அருட்பெருக்கைப் பெற்றும் துயரத்தினின்றும் நீங்குதற்கு ஆற்றலில்லாத என்னைக் கைவிட்டிடாதே' என்ற பொருள்பட மணிவாசகர் நீத்தல் விண்ணப்பத்தில் ஒரு செய்யுளை அருளியிருக்கிறார். ஆதலின் அன்பர்களே! அறிவுமயமான, ஆனந்த வடிவமான ஒன்றை அறியவேண்டும். அதுவே சிவம். அன்பு ததும்பி யிருப்பதற்கு இரங்குவன் அன்பு வடிவான ஆண்டவன். "சிவனென யானுந் தேறினன் காண்க" என்பர் மணிவாசகனார். "சிவனென்னு நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்" என்பர் அப்பரடிகளும். உயிர்க்கு எல்லாம் அறியுந்தன்மை வரும். ஆனால் எல்லாம் செய்யும் வல்லமை வரவே வராது. சிவத்தின் சம்பந்தமே சைவம். அனாதியாக எல்லாம் அறிந்த, எல்லாம்

செயவல்ல, என்றும் உள்ள வஸ்து சிவபெருமான். என்றைக்கும் சைவ சித்தாந்தம் உண்டு. சிலரால் வெளிப்படுத்திய பொழுதுதான் ஆரம்பித்தது என்று கொள்ளவேண்டாம். சிவஞான போதத்தில் 'சிவமென்னும் அந்ததர' என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தம் என்பது வேதாந்தம், அதாவது அறிவு நூல் முடிபு என்பது பொருள். தரம் என்றால் மேலானது; அதாவது அதைவிட மேலில்லை. 'அந்ததர' என்றால் வேதாந்தத்தின் முடிவாக உள்ள சித்தாந்தியே. உபநிஷத் என்றால் பரம்பொருளின் சமீபத்தில் கொண்டுபோய் வைப்பது என்பது பொருள். அறிவு நூல் முடிவாக உள்ளதுவே சித்தாந்தம். சித்தியாரில் "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்." ஆகமம் என்றால் ஆப்தர்களிடமிருந்து வரும் நல்ல மொழி. ஆகமம் என்று மாத்திரம் சொல்லாமல் சிவ ஆகமம் என்று கூறியது அநாதியான ஒருவனுடைய வாயிலிருந்து வருவது என்பதைக் குறிக்கவே. வேதாந்தத் தெளிவே சித்தாந்தம் என்பது. வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் ஒன்றுதான்; வேறல்ல. சிவப்பிரகாசத்தில் "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" என்று கூறப்பட்டிருக்கிறது. சிவநேசச் செல்வர்களே! சிவம் என்பதைப்பற்றி முதல், வழி, சார்பு நூல்களான சிவஞானபோதம், சித்தியார், சிவப்பிரகாசம் என்ற நூல்களைக்கொண்டு சொன்னேன். இனிச் சித்தாந்தம் என்பதுபற்றி ஒரு சிறிது கூறுவேன்.

சித்தாந்தம் என்பது சித்த+அந்தம் என்ற இரண்டும் சேர்ந்த சொற்றொடர். 'சித்த' என்பதன் முடிவில் 'அ' இருக்கிறது. இவ்விரண்டும் உயிர்கள். உயிர் உயிருடன் சேர்வதில்லை. மயிலும் சேவலுமாக இரண்டு உயிர் சேர்ந்து சண்முகப் பெருமானிடத்திலேயே இருக்கிறது. வேறு எங்கும் இல்லை. 'சித்' என்றால் 'கிடைத்த' என்று பொருள். பல நூல்களில் ஆராய்ந்து முடிவாகக் கிடைத்த முடிபே சித்தாந்தம். 'அறிதோறறியாமை கண்டற்றால்' என்று திருவள்ளுவர் படிக்கப் படிக்க அறியாமை வளருகிறதென்கிறார். ஆசாரியன் ஆண்டவன் அருளைக்கொண்டு நமக்குக் கொடுக்கும் முடிபு. எல்லா முடிபுகளும் அதில் இருக்க வேண்டும். வேறு முடிபுகளை விரோதிக்கக் கூடாது. எந்த மத ஆசாரத்திற்கும் விரோதம் கூடாது. சித்தாந்தம் என்ற

பதத்திற்கு சக்தி, இலக்ஷணம், தொனி என்ற மூன்று உண்டு. இவை ஆற்றல், ஆகுபெயர், பிறகுறிப்பு என்று தமிழால் சொல்லப்படுகிறது. எல்லா முடிபுகளுக்கும் சித்தாந்தம் என்று சொன்னாலும் சைவ சித்தாந்தத்திற்கே சிறப்பாகக் கொள்ளப்படுகிறது. சித்தாந்தத்தில் ஆத்ம தத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சிவதத்துவம் 5 ஆக 36 தத்துவங்கள் இருக்கின்றன. தனித்தனியே 36 தத்துவங்களைச் சொன்ன வேறு சமயங்கள் இருப்பதாக அடியேனுக்குத் தெரியவில்லை. எல்லாச் சமயங்களும் சைவ சமயத்தில் அடங்கியிருக்கின்றன. "இராஜாங்கத் தமர்ந்தது வைதிக சைவம்" என்று கூறியிருப்பது காண்க. எல்லாத் தத்துவங்களையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டிருப்பது சைவ சித்தாந்தம். அது சிறிய குறுகியவழியில் செல்வதல்ல. 'சித்தாந்த வீதிவரும் தேவே பராபரமே' என்றார் தாயுமானாரும். "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்ற தாகும்" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கு நோக்கற்பாலது. சிவஞான சுவாமிகளும், "எவ்வெவர் கோட்படுபொருளும் அஞ்செழுத்தி லடக்கி" என்று கூறியிருக்கின்றனர். நாஸ்திகம் முதலான எல்லா மதங்களுமே இச் சைவ சமயத்தி லடங்கியிருக்கின்றன. ஜைன அர்ச்சனையில் 'சிவாய நம' என்று சொல்லப்படுகிறது. 'சிவகதி' என்பது அவர்கள் மோட்சம்.

[சுவாமிகள் அத்வைதத்தின் உண்மைப் பொருளை விரிவாக எடுத்துரைத்து விளக்கினார்கள்.]

மெய்யன்பர்களே! இதுகாறும் வெளியிற் காணப்படும் பொருள்கள் தாழ்ந்தனவென்றும், அழியுந் தன்மைத்தென்றும், இதற்கெல்லாம் அப்பாற்பட்ட மேற்பொருள் ஒன்று உண்டென்றும், அதை நாம் ஆராயவேண்டும் என்றும், ஆராய்ந்து பெற வேண்டும் என்றும், அழுதே பெற முடியும் என்றும், அன்பு முடிவாக அழ உள்ளே உள்ள வெள்ளப் பெருக்கு வெளிப்படும் பரவஸ்து தோன்றும் என்றும், அதுவே இடையில் வாராத அனாதியான சிவம் என்றும் சாஸ்திர, ஆசாரிய, ஈஸ்வர அருளால் கிடைப்பது சைவ சித்தாந்தம் என்றும், அதில் எல்லாச் சமயங்களுமே அடங்கியிருக்கின்றன என்றும் கண்டோம்.

மெய்யன்பர்களே! சைவ சித்தாந்தம் என்பதுபற்றி அடியேன் பேசினேன்; நீங்கள் கேட்டீர்கள். அடியேனைப் பேசுவித்தவன், உங்களைக் கேட்பித்தவன் நம்முடைய ஆண்டவனல்லவா? அவனுக்கு நாம் நன்றி செலுத்தல் வேண்டாமா? என்ன நன்றி செய்யப் போகிறோம்? அவனைத் தியானிப்போம்; துதிப்போமாக.

" உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே "

கந்தரனுபூதி

மா. ப. தியாகராஜ முதலியார், பி. ஏ.

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனு நீயலையோ
எல்லா மற வென்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூபதியே.

இப்பாடலின் முதலிரண்டடிகள் முருகனுடைய சல்லாப லீலைகளையும் அவருடைய யோக விநோதங்களையும் நினைப்பூட்டுகின்றன. அவருடைய அடியவர்கள் துன்பப் படுவார்களே யானல் அவர் உல்லாசமாக இருத்தல் முடியாதாகையால், அவர் உல்லாசமாக இருக்க, அவருடைய அடியவர்களும் துன்பமின்றி உல்லாசமாக இருப்பார்கள் என்பது பெற்றும். யோகன் என்றதனல் தன்னுடைய சுவஸ்ரூபத்தில் என்றும் ஆனந்தித்திருப்பவன் என்று கொள்ளல் வேண்டும். சூருடன் போர்புரியினும், வள்ளி அம்மையாருடன் சல்லாபமாயிருப்பினும், தான் சுத்த தத்துவத்தினின்றும் வழாது மாயாதீதனய், சுப்பிரமணியனய் என்றும் விளங்கிக்கொண்டிருக்கும் ஞானகரன் முருகன் என்பது யோகன் என்ற சொல்லால் விளக்கப்படுகிறது. யோக இதன் என்று கூறுவதால் அவருடைய யோகநிலை அடியவர்களுக்கு இனிமையைப் பயக்கவல்லது.

"மன்மதனை எரித்த யோகநிலை" போன்றதன்று என்பதையும் காணலாம். தன்னை எதிர்த்துப் பொருத சூரனுக்கும் தன்னுடன் மயிலும் சேவலுமாக விளங்கக்கூடிய சாயுஜ்ய பதவியைத் தந்த தயாமூர்த்தியான கந்தன் தன்பால் அன்பு செய்து வழிபடுபவர்களுக்கு இனிமையைப் பயப்பன் என்பதில் ஐயமுண்டா? பிரமனைச் சிறையிலிட்ட போது தன் யோக பலத்தினால் அநாயாசமாகச் சிருஷ்டித் தொழிலைச் செய்து காட்டிய விநோதன் என்பதையும் நினைப்பூட்டுகிறது. உல்லாசன், நிராகுலன், யோகன், இதன், சல்லாபன், விநோதன் என ஆறு குணங்களை அறுமுகன் பால் விழைந்து பாடியதால் அப்படிப்பட்ட குணங்கள் நம் வாழ்க்கையின் மேம்பாட்டிற்கும் இன்றியமையாதன வென்பதையும் உணரல் வேண்டும். எக்குணங்களை நாம் பெரிதும் பாராட்டுகிறோமோ அக்குணங்கள் நமக்கு அமையும் என்பதையும் எண்ணிப் பிறருடைய குற்றங்களைப் பாராட்டாது இறைவனின் நற்குண நற்செய்கைகளையே நினைந்து போற்றி வாழ்வதே சமய வாழ்வாகும். இறைவனைப் போற்ற வேண்டுமென்று சமயங்கள் போதிப்பதன் தத்துவமிதுவே யாகும்.

> "அப்பன் சடையன் ஆத்தாள் பெருநீலி
> செப்பரிய மாமன் உறி திருடி—ஒப்பில்
> அண்ணன் பெருவயிற்றோன் ஆறுமுகத் தானுக்கிங்
> கென்ன பெருமை இது?"

என்று ஒரு பாடலை யான் சிறு வயதில் கேட்டதுண்டு. வேறு எந்த மூர்த்தங்களிடத்தும் யாதானும் ஒரு குறைபாடு காணலாம். ஆனால் மனத்துக்குகந்த குற்றமற்ற மூர்த்தம் முருகனன்றி வேறில்லை யென்றே கூறலாம். அவரை வசைபாட வேண்டுமானால் "வாழ்வாய் இனி நீ மயில்வாகனனே" என்றுதான் பாடவேண்டும்.

மூன்றாமடியில் "எல்லாமற என்னை இழந்த நலம் சொல்லாய்" என வேண்டுகிறார். "என்னை" யென்றதனால் ஜீவ தத்துவம் கொண்டு அறியாமையால் திகைக்கும் என்னை யென்பதாம். யான் எனது என்று சுட்டிக்காட்டும் கட்டுப்பாடு அகன்று, நான் என்ற தனிப்பட்ட நிலையையு

மிழந்து நீயாகவே விளங்கி ஆனந்த மெய்தும் நல்லகதியை எனக்கு எடுத்துரைப்பாய் முருகா ! தேவர்களுக்கெல்லாம் பதியாய் விளங்குபவனே! தேவர்களை யெல்லாம் துன்புறுத்திய சூரபன்மனையும் வணங்க வைத்த தேவாதி தேவா ! எனப் போற்றி வேண்ட இப்பாடலின் மனனம் உதவுகிறது.

"வணங்காரைத் தண்டிக்க" என்பது இப்பாடலுக்குத் தலைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. வணங்காரைத் தண்டிப்பதென்றால் துன்புறுத்துவதென்ற பொருளன்று ; சீர்திருத்துவதென்றே பொருளாகும். முருகனை வணங்கார் நம் விரோதிகளேயாவர். விரோதம் நிகழ்வதும் அவன் செயலாதலால், அது அவன்பால் பெறப்படும் ஒன்றுபடும் நிலைமைக் கூனமாதலால் வணங்காரைச் சீர்திருத்த வேண்டிய அவசியம் இங்குக் காட்டப்படுகிறது. "Agree with thine Adversary" என்பது ஏசுநாதருடைய உபதேசம். அது அவனருளால் நிகழவேண்டுமென்பது சைவ சமயத்தின் உண்மை. சுந்தரர்க்காகத் தூது சென்ற சிவபெருமான் உணர்த்திய உண்மை. ஏயர்கோன் கலிக்காமநாயனுர் அது காரணம் பற்றிச் சுந்தரர்பால் விரோதம் கொண்டிருந்த பான்மையைச் சுந்தரரைக் கொண்டு நீக்கிய வரலாறுகள் இத்தத்துவத்தை நன்குணர்த்துகின்றன.

> "இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல்"

என்பது வள்ளுவர் உபதேசம். விரோதிகளுக்கும் முருகன் நன்மையை வழங்கவேண்டும் என்று பிரார்த்திப்பதே நன்னயம் செய்யும் பண்பாடாகும். இப்பாடலின் மூலமந்திரம் " ஓம் அருணை வடிவான் லுங் லுங் " என்பது. " லுங் லுங்" என்பதற்கு முன் நாம் யாருக்கு நன்மையைச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறோமோ, அவர்கள் பெயரைச் சொல்லிச் செபிக்கவேண்டும். இப்பாடலின் மனனத்தால் வணங்காதார்க்கு ஊறு விளைவித்தல் நோக்கமன்று, அவர்கள் சீர்திருத்தப்படவேண்டும் என்பதே குறிக்கோளாகக் கொள்ளல் வேண்டும். " தேங்காய்,

பழம், சர்க்கரை வைத்து ஆராதித்து இப்பாடலைச் செபித்தல் நலம் பயக்கும்.

இப்பாடலின் யந்திரம்



திருவெம்பாவை—திருப்பள்ளியெழுச்சி

திருவாளர் R. சண்முகசுந்தரஞ் செட்டியாரால் சிறந்த உரை எழுதப்பட்டு, நமது சமாஜப் பொன்விழா கொண்டாடிய வருடம் வெளியிடப்பட்ட இந்நூல் ரூ. 1- 160 பக்கங்கள் கொண்டுள்ளது. வி. பி. தபால்மூலம் அனுப்ப 0·86 நை. பை. தபாற்செலவு கூட ஆகும்.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை

சமாஜ இரண்டாம் பதிப்பு, ஆராய்ச்சி அகராதி, அரும் பதவுரை, குறிப்பு, பாட்டு முதற்குறிப்பு முதலியவற்றுடன் கூடியது. ராப்பர் பைண்டு விலை அணா பன்னிரண்டு.

கிடைக்குமிடம் :—

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
14, வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4.